# நாடாளுமன்ற பட்ஜெட் கூட்டத்தொடர்!



**04.02.2026 நிகழ்வுகள்**

## கழக மக்களவை - மாநிலங்களவை உறுப்பினர்கள் எழுப்பிய கேள்விகள்!

### 1. ஐசிஎஃப் பெரம்பூரில் உள்ளூர் ஆட்களுக்கு வேலையில் முன்னுரிமை வழங்குக!

**ஆ. ராசா எம்.பி.**



தமிழ்நாடு உட்பட நாட்டில் இயங்கும் வந்தே பாரத் எக்ஸ்பிரஸ் இரயில்கள் மற்றும் அம்ரித் பாரத் இரயில்களின் பட்டியல் என்ன? அதிவேக எக்ஸ்பிரஸ் இரயில்கள் தயாரிக்கும் ரயில் பெட்டி தொழிற்சாலைகளின் விவரங்கள்? ஐசிஎஃப் பெரம்பூர் உட்பட ரயில் பெட்டிகள் தயாரிக்கும் தொழிற்சாலைகளில் உள்ளூர்வாசிகளுக்கு முன்னுரிமை அளிக்க அரசு முன்மொழிகிறதா? ஜனவரி 1, 2026 நிலவரப்படி, கடந்த மூன்று ஆண்டுகளில் தெற்கு ரயில்வேயில் நிரந்தர மற்றும் ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்தப்பட்ட ஊழியர்களின் எண்ணிக்கை என்ன? எனும் பல்வேறு விசயங்களை அவர் குறிப்பிட்டுள்ளார்.

### 2. நாடாளுமன்ற நிலைக்குழு வலியுறுத்தியும் தமிழ்நாட்டிற்கான கல்வி நிதியை விடுவிக்காதது ஏன்?

**பி. வில்சன்**



தமிழ்நாட்டில் இயங்கும் முதன்மை வேளாண்மைக் கடன் சங்கங்களின் (PACS) எண்ணிக்கை மற்றும் அவற்றில் சட்டப்பூர்வமாக தணிக்கைகள் முடிக்கப்பட்டவை உள்ளிட்ட விவரங்கள் கேட்டு திமுக மாநிலங்களவை உறுப்பினர் பி. வில்சன் கேள்வி எழுப்பியுள்ளார். தணிக்கையாளர் பற்றாக்குறை, பயிற்சி பெற்ற பணியாளர்கள் பற்றாக்குறை அல்லது இன்னும் கணினிமயமாக்க நிலுவையில் உள்ள சங்கள், தாமதத்திற்கான காரணங்கள் போன்ற விவரங்களையும் அவர் கோரியுள்ளார். முதன்மை வேளாண்மைக் கடன் சங்கங்கள் கணினிமயமாக்கல் திட்டத்தின்கீழ் கொண்டுவரப்பட்டிருந்தபோதிலும், கணிசமான எண்ணிக்கையிலான சங்கங்களில் இன்னும் கணினி வழி அல்லது டிஜிட்டல் தணிக்கைகள் மேற்கொள்ளப்படாதது ஏன் என்றும் அவர் கேட்டுள்ளார்.

தனது மற்றொரு கேள்வியில் பி. வில்சன் எம்.பி. அவர்கள் கடந்த ஐந்து ஆண்டுகளில், சமக்ர சிக்ஷா திட்டத்தின் கீழ் திட்ட ஒப்புதல் வாரியத்தால் ஒப்புதல் அளிக்கப்பட்டு விடுவிக்கப்பட்ட நிதி விவரங்களை கேட்டுள்ளார். NEP, 2020 அல்லது PM SHRI பள்ளிகள் தொடர்பான கருத்து வேறுபாடுகள் காரணமாக நிதியைத் தடுத்து நிறுத்துவது நியாயமற்றது என்று கருதி, மேற்கு வங்கம், கேரளா மற்றும் தமிழ்நாடு போன்ற மாநிலங்களுக்கு சமக்ர சிக்ஷா அபியான் (SSA) திட்டத்திற்கான நிலுவையில் உள்ள நிதியை விடுவிக்குமாறு EWCY&S மீதான நாடாளுமன்ற நிலைக்குழு ஒன்றிய அரசை வலியுறுத்தியுள்ள போதிலும் நிதி விடுவிக்கப்படாததற்கான காரணங்கள் என்ன என்றும் அவர் கேட்டுள்ளார்.

### 3. தேசிய நெடுஞ்சாலைகளில் சாலை விபத்துகளைத் தடுக்க நடவடிக்கை

**எஸ். கல்யாணசுந்தரம்**



தேசிய நெடுஞ்சாலைகளில் சாலை விபத்துகளைத் தடுக்கும் நோக்கில் அமைச்சகம் மேற்கொண்டுள்ள ஆய்வுகள் மற்றும் மேம்பாட்டுத் திட்டங்கள் என்ன என்று திமுக மாநிலங்களவை உறுப்பினர் எஸ். கல்யாணசுந்தரம் கேள்வி எழுப்பியுள்ளார். அறிவார்ந்த போக்குவரத்து மேலாண்மை அமைப்புகள், தானியங்கி பிரேக்கிங், சாலை சென்சார்கள் விபத்து கண்டறியும் கருவிகள் போன்ற தொழில்நுட்பங்கள், வழிமுறைகள் குறித்து அரசின் திட்டங்கள் என்ன? விபத்துகள் மற்றும் உயிரிழப்புகளைக் குறைப்பதற்காக பொதுமக்களிடையே விழிப்புணர்வுப் பிரச்சாரங்கள் மற்றும் பாதுகாப்புக் கொள்கைகளை கொண்டு செல்ல எடுக்கப்பட்டு வரும் நடவடிக்கைகள் யாவை? என்றும் அவர் கேட்டுள்ளார்.

### 4. சமக்ர சிக்ஷா திட்டத்தின் நிதி

**டாக்டர் கனிமொழி சோமு**



சமக்ர சிக்ஷா திட்டத்தின்கீழ் ஒதுக்கப்பட்ட நிதியில் செலவிடப்படாத நிதியின் அளவு எவ்வளவு என்றும் அவ்வாறு செலவிடப்படாத நிதியை வேறு மாநிலங்களில் பயன்படுத்துவதற்கான திட்டங்கள் உள்ளதா என்றும் நாடாளுமன்றத்தில் திமுக எம்.பி. டாக்டர் கனிமொழி சோமு கேள்வி எழுப்பியுள்ளார்.

### 5. மூத்த குடிமக்களுக்கான பயணக் கட்டண சலுகையை மீண்டும் வழங்கிடுக!

**ராஜாத்தி சல்மா நேரமில்லா நேரத்தில் வலியுறுத்தல்!**



கோவிட்19 தொற்றுநோய் காலத்தில் இடைநிறுத்தப்பட்ட மூத்த குடிமக்களுக்கான கட்டணச் சலுகைகளை மீண்டும் வழங்க வேண்டிய தன் தேவை குறித்து மாநிலங்களவை நேரமில்லா நேரத்தில் திமுக மாநிலங்களவை உறுப்பினர் ராஜாத்தி சல்மா பேசுனார். அதன் விவரம் பின்வருமாறு:

அனைத்து வகை பயணங்களிலும் மூத்த குடிமக்கள் ஆண்களுக்கும் பெண்களுக்கும் முறையே 40% மற்றும் 50% வழங்கப்பட்டு வந்த சலுகைகள் மார்ச் 2020உடன் நிறுத்தப்பட்டன. அதன் பின் இந்த இடைநீக்கம் திரும்பப் பெறப்படவில்லை. ஓய்வூதியத்தை நம்பியுள்ள முதியவர்கள் மற்றும் நிலையான வருமானம் இல்லாத முதியவர்கள் இதனால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

கோவிட்-19 காலகட்டத்தில் இந்தச் சலுகைகளை நிறுத்தி வைத்ததன் மூலம் அமைச்சகம் ரூ.2560.9 கோடியைச் சேமிக்க முடிந்தது என்பதை RTI பதிவுகள் வெளிப்படுத்தியுள்ளன. குறைந்த வருமானம் கொண்ட பயணிகளுக்கு உதவுவதற்காக, குறைந்தபட்சம் ஸ்லீப்பர் மற்றும் 3AC வகுப்புகளிலாவது இந்தச் சலுகைகளை மீட்டெடுக்க Parliamentary Standing Committee on Railways பரிந்துரைத்துள்ள போதிலும் மேற்கொண்டு அதில் நடவடிக்கை எதுவுமில்லை.

ரயில்வே அமைச்சர் உடனடியாக இந்தக் கொள்கையை மறுபரிசீலனை செய்து, இந்தச் சலுகைகளை மீண்டும் வழங்க வேண்டும் என்றும் இதனால் நமது மூத்த குடிமக்கள் எளிதாகவும் மரியாதையுடனும் பயணிக்க முடியும் என்றும் ராஜாத்தி சல்மா எம்.பி. பேசினார். மேலும் மாற்றுத்திறனாளிகள் மற்றும் பத்திரிகையாளர்களுக்கும் வழங்கப்பட்டு வரும் சலுகைகளை விரிவுபடுத்துமாறும் ஒன்றிய அரசை அவர் வலியுறுத்தினார்.

### 6. சாதி அடிப்படையிலான மக்கள் தொகை கணக்கெடுப்பு வரைவு விதிகளை வெளியிடுக!

**ராஜாத்தி சல்மா**

இந்தியாவில் சாதி அடிப்படையிலான மக்கள் தொகை கணக்கெடுப்பு குறித்த வரைவு விதிகளை ஒன்றிய அமைச்சகம் வெளியிட்டுள்ளதா என திமுக மாநிலங்களவை உறுப்பினர் ராஜாத்தி சல்மா கேள்வி எழுப்பியுள்ளார். சாதிகளைப் பட்டியலிடுவதற்கான வழிகாட்டுதல்களை இறுதி செய்வதற்கு முன்பு மாநிலங்களுடன் கலந்தாலோசிக்க வேண்டும் என்பது குறித்து தமிழ்நாட்டிடமிருந்து பெறப்பட்ட மனுக்கள் மீதான நடவடிக்கைகள் என்ன? என்றும் அவர் கேட்டுள்ளார்.

### 7. சென்னை பெங்களூரு NH40ஐ மேம்படுத்தும் திட்டம் நிறைவுறுவது எப்போது?

**ஆர். கிரிராஜன்**



தமிழ்நாட்டில் தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தால் செயல்படுத்தப்படும் அனைத்து நெடுஞ்சாலைத்திட்டங்களையும் நிறைவு செய்ய அரசாங்கம் போதுமான நடவடிக்கைகளை எடுத்துள்ளதா என திமுக மாநிலங்களவை உறுப்பினர் ஆர். கிரிராஜன் கேள்வி எழுப்பியுள்ளார். கடந்த நான்கு ஆண்டுகளில் பயன்படுத்தப்பட்ட மொத்தத் தொகை எவ்வளவு என்றும் சென்னை, பெங்களூரு மற்றும் வேலூரை இணைக்கும் NH40 நெடுஞ்சாலைக்கான 1,338 கோடி மதிப்பிலான திட்டத்தை விரைவுபடுத்த அரசாங்கம் எடுத்துள்ள நடவடிக்கைகள் யாவை? என்றும் அவர் கேட்டுள்ளார்.

### 8. மாற்றுப் பாலினத்தவர்களின் வாழ்வாதாரத்தை வலுப்படுத்துக!

**எஸ்.ஆர். சிவலிங்கம்**



விளிம்புநிலை சமூகத்தினருக்கு சம வேலைவாய்ப்பு எனும் நோக்கில் மாற்றுப் பாலினத்தவர்களை ஊர்க்காவல் படையில் தமிழ்நாடு சேர்த்திருப்பதை குறிப்பிட்டு ஒன்றிய அரசின் திட்டங்களின்கீழ், மாற்றுப் பாலினத்தவர்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகள் பயனடைந்தது குறித்து திமுக எம்.பி. எஸ். ஆர். சிவலிங்கம் கேள்வி எழுப்பியுள்ளார். இந்தத் திட்டங்களுக்காக பயன்படுத்தப்பட்ட நிதி எவ்வளவு? மாற்றுப் பாலினத்தவர்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகளின் வாழ்வாதாரம், நிதிப் பாதுகாப்பு மற்றும் சமூகத்தில் சம வாய்ப்பை வலுப்படுத்த அரசாங்கத்தால் முன்மொழியப்பட்ட நடவடிக்கைகள் யாவை? எனவும் கேட்டுள்ளார்.

### 9. தெற்கு வழித்தடங்களில் மட்டும் மோசமான இரயில் பெட்டிகள் ஏன்?

**தர்மபுரி ஆ. மணி**



தெற்கு வழித்தடங்களில் ராஜதானி எக்ஸ்பிரஸ் இரயில்களில் இரயில் பெட்டிகளின் மோசமான நிலை மற்றும் தரமற்ற பயணிகள் சேவைகள் தொடர்பான கடுமையான புகார்கள் எழுந்துள்ளதை சுட்டிக்காட்டி தர்மபுரி எம்.பி. ஆ.மணி நாடாளுமன்றத்தில் கேள்வி எழுப்பியுள்ளார். தேஜாஸ் எக்ஸ்பிரஸ் மற்றும் ராஜதானி போன்ற பிற பிரீமியம் ரயில்களில் சேவைகள் அதிக டைனமிக் கட்டணங்களை வசூலித்த போதிலும், பயணிகள் கிழிந்த மற்றும் இடம்பெயர்ந்த இருக்கைகள், கரப்பான் பூச்சிகளின் தொல்லை, மோசமான தரமற்ற உணவு மற்றும் சுகாதாரமற்ற படுக்கை போன்ற பிரச்சினைகளை எதிர்கொள்கின்றனர். இதுகுறித்து கடந்த மூன்று ஆண்டுகளில் நடத்தப்பட்ட ஆய்வுகள் மற்றும் பெறப்பட்ட புகார்களின் விவரங்கள் என்ன? தரத்தை மேம்படுத்துவதற்கும் சீரான சேவை தரத்தை உறுதி செய்வதற்கும் அரசாங்கத்தால் எடுக்கப்பட்ட/எடுக்க முன்மொழியப்பட்ட திருத்த நடவடிக்கைகள் யாவை? எனவும் அவர் கேட்டுள்ளார்.





முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் ‘உங்களுடன் ஸ்டாலின்’ 10ஆயிரம் முகாம்கள் நலத்திட்டப் பயன்கள் மற்றும் 1.80 இலட்சம் புதிய பயனாளிகளுக்கு சமூக பாதுகாப்புத் திட்டப் பயன்கள் வழங்கி விழாப் பேருரை ஆற்றியதை தொடர்ந்து மதுரை மாவட்டம் திருப்பாலை இ.எம்.ஜி யாதவா கல்லூரியில் நடைபெற்ற அரசு விழாவில் வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி மாவட்ட ஆட்சித் தலைவர் பிரவீன் குமார் தலைமையில் வருவாய்த் துறை சார்பில் 2ஆயிரம் பயனாளிகளுக்கு சமூக பாதுகாப்புத் திட்டப் பயன்கள் பெறுவதற்கான ஆணைகள் மற்றும் பிற அரசுத் துறைகள் சார்பில் 112 பயனாளிகளுக்கு அரசு நலத்திட்ட உதவிகள் என மொத்தம் 2112 பயனாளிகளுக்கு ரூபாய் 4.67 கோடி மதிப்பீட்டில் நலத்திட உதவிகளை வழங்கினார். இந்நிகழ்வில் சோழவந்தான் சட்டமன்ற உறுப்பினர் ஆ.வெங்கடேசன், மதுரை தெற்கு சட்டமன்ற உறுப்பினர் மு.பூமிநாதன், மாநகராட்சி துணை மேயர் தி.நாகராஜன், மாவட்ட வருவாய் அலுவலர் அன்பழகன், மாமன்ற உறுப்பினர்கள் வாசுகி சசிகுமார், ராதிகா கவுரி சங்கர், பால்செல்வி பாலகிருஷ்ணன், திருப்பாலை ராமமூர்த்தி உள்ளிட்ட திரளானோர் பங்கேற்றனர்.

---

## தி.மு.க. சட்டத்துறையால் நியமிக்கப்பட்ட

# தி.மு.க. சட்டத்துறை மாநில நிர்வாகிகள், மண்டலப் பொறுப்பாளர்கள் மற்றும் மாவட்ட ஒருங்கிணைப்பாளர்கள் (DLC) - சட்டமன்றத் தொகுதி ஒருங்கிணைப்பாளர்கள் (CLC-2) - மாவட்ட கண்காணிப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டம்!

**கழக சட்டத்துறைச் செயலாளர் என்.ஆர்.இளங்கோ, எம்.பி., அறிக்கை!**

தி.மு.க. சட்டத்துறை மாநில நிர்வாகிகள், மண்டலப் பொறுப்பாளர்கள் மற்றும் மாவட்ட ஒருங்கிணைப்பாளர்கள் (DLC) - சட்டமன்றத் தொகுதி ஒருங்கிணைப்பாளர்கள் (CLC-2) - மாவட்ட கண்காணிப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டம் வருகிற 14-02-2026 சனிக்கிழமை காலை 10.00 மணி அளவில், சென்னை, அண்ணா அறிவாலயத்தில் உள்ள கழக அலுவலகத்தில் சட்டத்துறைத் தலைவர் மூத்த வழக்கறிஞர் இரா.விடுதலை அவர்கள் தலைமையில், கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி அவர்கள் சிறப்புரையாற்றிட கழக சட்டத்துறை இணைச் செயலாளர்கள் - துணைச் செயலாளர்கள் - தலைமைக் கழக வழக்கறிஞர்கள் ஆகியோர் கலந்து கொள்ள நடைபெறும்.

இக்கூட்டத்தில் தி.மு.க. சட்டத்துறையால் நியமிக்கப்பட்ட மாவட்ட ஒருங்கிணைப்பாளர்கள் (DLC) - சட்டமன்றத் தொகுதி ஒருங்கிணைப்பாளர்கள் இருவர் (CLC-2) - மாவட்ட கண்காணிப்பாளர்கள் அனைவரும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

பொருள் : SIR குறித்து

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்- 04.02.2026

**என்.ஆர்.இளங்கோ, எம்.பி.,**
செயலாளர்,
தி.மு.க. சட்டத்துறை

---

## தி.மு.க. சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு

# மாவட்ட அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் நியமனம்!

**சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு செயலாளர் டாக்டர் அ.சுபேர்கான் அறிவிப்பு!**

**கழகத் தலைவர்** அவர்களின் ஆணைப்படி - மாவட்டச் செயலாளர்/பொறுப்பாளர் ஒப்புதலோடு தி.மு.க. சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவின் மாவட்ட, மாநகர அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் பின்வருமாறு நியமிக்கப்படுகிறார்கள்.

### திருப்பூர் கிழக்கு மாவட்டம்

தலைவர் - பா. கலைச்செழியன் 302/12, வசந்தம் நகர், எல்லீஸ் நகர் அஞ்சல், தாராபுரம் - 638657, திருப்பூர் மாவட்டம்.

துணைத் தலைவர் - கே.ஏ. சலீம் 4/154, சென்னிமலை சாலை, மலர் செல் பார்க், காங்கேயம் - 638701, திருப்பூர் மாவட்டம்.

அமைப்பாளர் - கே.எஸ். ஆசிக் பாட்சா 5/48, தெற்கு மஸ்லீம் தெரு, அலங்கியம், தாராபுரம் வட்டம் - 638657, திருப்பூர் மாவட்டம்.

துணை அமைப்பாளர்கள் - 1) எஸ். மணிமொழி 27, சி.எஸ்.ஐ. நகர், தாராபுரம் - 638656, திருப்பூர் மாவட்டம். 2) ஏ. முகமது அப்பாஸ் அலி 302/6, வசந்தம் நகர், கோவை பைபாஸ் ரோடு, திருப்பூர் மாவட்டம் - 638657. 3) ஜா. ஜான் பிரகாஷ் 8/55/3, விட்டல் பாய் நகர், கருணா கல்யாண மண்டபம் அருகில், தாராபுரம் - 638656, திருப்பூர் மாவட்டம். 4) எ.ஐ. முகமது ஷபியுல்லா 228, அண்ணா நகர், மூலனூர் - 638106, திருப்பூர் மாவட்டம். 5) மு. ஷேக் பரிக் 21, அரசுபள்ளி பாளையம், தாராபுரம் - 638656, திருப்பூர் மாவட்டம். 6) கே. பழனிச்சாமி சாணார்பாளையம், மூலனூர், தாராபுரம் - 638106, திருப்பூர் மாவட்டம்.

### தஞ்சை வடக்கு மாவட்டம்

#### கும்பகோணம் மாநகரம்

தலைவர் - எம். முகமது பாரூக் 36, நாராயணன் குடியிருப்பு, கும்பகோணம், தஞ்சாவூர் மாவட்டம்.

துணைத் தலைவர் - ஜே.என். மைதீன் 65, சுவாமிமலை மெயின் ரோடு, மேலக்கொட்டையூர், கும்பகோணம், தஞ்சாவூர் மாவட்டம்.

அமைப்பாளர் - அ. தங்கராஜ் 25, மோதிலால் தெரு, கும்பகோணம், தஞ்சாவூர் மாவட்டம்.

துணை அமைப்பாளர்கள் - 1) எஸ்.எம்.ஜி. நிஜாம் 24, யானையடி தெரு, மேலக்காவேரி, கும்பகோணம், தஞ்சாவூர் மாவட்டம். 2) ஜா. மைக்கேல் ஜெரோம் 151-152, காமராஜ் ரோடு, கும்பகோணம், தஞ்சாவூர் மாவட்டம். 3) எம். நியமத்துல்லா 35, சுவாமிமலை மெயின் ரோடு, மேலக்காவேரி, கும்பகோணம், தஞ்சாவூர் மாவட்டம். 4) ஆ. மில்லர் சகாயராஜ் 1, செம்போடைத் தெரு, கும்பகோணம், தஞ்சாவூர் மாவட்டம். 5) நா. அந்தோணி கிளாடிஸ்வனிதா, 39, வட்டிக்குருக்கள் தெரு, செல்வம் குடியிருப்பு, கும்பகோணம், தஞ்சாவூர் மாவட்டம்.

### இராமநாதபுரம் மாவட்டம்

இராமநாதபுரம் மாவட்ட சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு துணை அமைப்பாளர்களாக **மு. சுல்தான் சம்சூல் கபீர்,** (3/92சி, புதுக்கிழக்கு தெரு, கீழக்கரை, இராமநாதபுரம் மாவட்டம் - 623517.), **அ. செய்யது அப்பாஸ்** (ரமலான் நகர், மேலக்கோட்டை அஞ்சல், இராமநாதபுரம் மாவட்டம்) ஆகியோர் நியமிக்கப்படுகிறார்கள்.

### தென்காசி வடக்கு மாவட்டம்

தென்காசி வடக்கு மாவட்ட சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு அமைப்பாளராக நியமிக்கப்பட்ட நாகூர் கனி அவர்கள் புளியங்குடி மேற்கு நகர பொறுப்பாளராக நியமிக்கப்பட்டதால், அவருக்கு பதிலாக, **ப. மைதீன்**, (ஏ36, புதுமனை 1வது தெரு, புளியங்குடி நகரம், தென்காசி மாவட்டம்.) அவர்கள் தென்காசி வடக்கு மாவட்ட சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு அமைப்பாளராக நியமிக்கப்படுகிறார்.

### தூத்துக்குடி வடக்கு மாவட்டம்

தூத்துக்குடி வடக்கு மாவட்ட சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு அமைப்பாளராக நியமிக்கப்பட்ட எஸ். டி.ஆர். பொன்சீலன் அவர்கள் சிறுப்பான்மையினர் நலஉரிமைப் பிரிவு மாநில துணைச் செயலாளராக நியமிக்கப்பட்டதால், அவருக்கு பதிலாக, **கே.எம்.எஸ். பீர் முகைதீன்,** (40, உப்பு கிணறு தெரு, கயத்தாறு, தூத்துக்குடி மாவட்டம்) அவர்கள் தூத்துக்குடி வடக்கு மாவட்ட சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு அமைப்பாளராக நியமிக்கப்படுகிறார்.

தூத்துக்குடி வடக்கு மாவட்ட சிறுப்பான்மையினர் நலஉரிமைப் பிரிவு தலைவராக நியமிக்கப்பட்ட கே.எம். எஸ். பீர் முகைதீன் அவர்கள் மாவட்ட அமைப்பாளராக நியமிக்கப்பட்டதால், அவருக்கு பதிலாக **எம். மைக்கேல்** அமலதாஸ், (ஞானமலர் பெட்ரோல் பங்க், மெயின் ரோடு, கோவில்பட்டி, தூத்துக்குடி) அவர்கள் தூத்துக்குடி வடக்கு மாவட்ட சிறுபான்மையினர் நலஉரிமைப் பிரிவு தலைவராக நியமிக்கப்படுகிறார்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்- 04-02-2026.

**டாக்டர் அ.சுபேர்கான்**
செயலாளர்
தி.மு.க. சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு

---

# சேலம் கிழக்கில் ‘தமிழ்நாட்டை தலைகுனிய விட மாட்டோம்’ மாபெரும் பொதுக்கூட்டம்!

## எஸ்.ஆர்.சிவலிங்கம் எம்.பி. தலைமை! திண்டுக்கல் லியோனி சிறப்புரை!

சேலம், பிப். 6 –

சேலம் கிழக்கு மாவட்ட ஏற்காடு சட்டமன்றத் தொகுதி தி.மு.க. சார்பில் தமிழ்நாட்டை தலைகுனிய விடமாட்டோம் மாபெரும் பொதுக்கூட்டம் வாழப்பாடியில் கிழக்கு மாவட்ட செயலாளர் எஸ்.ஆர்.சிவலிங்கம் எம்.பி., தலைமை தாங்கினார்.

கூட்டத்திற்கு வாழப்பாடி வடக்கு ஒன்றிய செயலாளர் சக்கரவர்த்தி வரவேற்புரையாற்றினார். கூட்டத்தில் கழக கொள்கை பரப்புக் குழு செயலாளர் திண்டுக்கல் ஐ. லியோனி சிறப்புரையாற்றினார்.


கூட்டத்தில் மாவட்ட துணை செயலாளர்கள் சுரேஷ்குமார், சின்னதுரை, மாவட்ட அவைத் தலைவர் கருணாநிதி, மாவட்ட நெசவாளர் அணி அமைப்பாளர் ஏ.ஏ.ஆறுமுகம், தகவல் தொழில் நுட்ப அணி மாநில துணை செயலாளர் டாக்டர் தருண், ஒன்றியச் செயலாளர்கள் மாணிக்கம், மாதேஸ்வரன், சக்கரவர்த்தி, ராஜேந்திரன், விஜயகுமார், சதீஷ்குமார், ரத்தினவேல், மூர்த்தி, மருதமுத்து, சிவராமன், டாக்டர் வே.செழியன், வரதராஜன், மணி, அழகுவேல், சித்தார்த்தன், பாலமுருகன், முத்துலிங்கம் , சோமசுந்தரம், தமிழ்ச்செல்வன், சங்கர், முனைவர் சீனிவாசன், பேரூர் செயலாளர்கள் செல்வம், பாலமுருகன், வெங்கடேஷ், காங்கமுத்து, வெங்கடேஷ்வரன், பாபு, சுப்ரமணி, நகர செயலாளர்கள் பாலசுப்பிரமணியம், ராமச்சந்திரன், வேல்முருகன், முன்னாள் எம்எல்ஏ மாதேஸ்வரன் , பள்ளிப் பாளையம் பெரியசாமி, மற்றும் மஞ்சினி செல்வராஜ், அரசு, சசிகுமார், சேகர், செல்வமணி, நகர மன்றத் தலைவர் அலெக்சாண்டர், மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் நிர்வாகிகள், சார்பு அணி நிர்வாகிகள் என திரளாக கலந்துகொண்டனர். கூட்டம் முடிவில் பேரூர் செயலாளர் செல்வம் நன்றியுரையாற்றினார்.

---

# திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

## ஜோலார்பேட்டை நா. மணி

**பிப்ரவரி 6 (2013)**



வேலூர் மாவட்டம், ஜோலார்பேட்டை பேரூர் செயலாளர் மற்றும் நகரச் செயலாளராக 31 ஆண்டுகள் பொறுப்பேற்று கழகப் பணியாற்றியவர்.

பேரூராட்சித் தலைவராக இரண்டு முறை தேர்ந்தெடுக்கப்பட்டு, மக்கள் நலப் பணிகளை மேற்கொண்டார்.

கழகம் அறிவித்த அனைத்து அறப்போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**